செ.வெ.எண்:19 நாள்: 13.04.2019

**நடைபெறவுள்ள மயிலாடுதுறை பாராளுமன்ற தேர்தல் 2019-ஐ முன்னிட்டு தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சி நடைபெறுவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி 18.04.2019 அன்று தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நடைபெறவிருக்கும் 28-மயிலாடுதுறை பாராளுமன்ற தேர்தல் 2019-ஐ முன்னிட்டு, தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு தேர்தலில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள், மின்னணு இயந்திரங்களை மற்றும் VVPAT இயந்திரத்தினை எவ்வாறு கையாள்வது தொடர்பான பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இன்றைய தினம் (13.04.2019) செம்பனார்கோவில் கலைமகள் கலை கல்லூரி, சீர்காழி விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெறவிருக்கும் 28-மயிலாடுதுறை பாராளுமன்ற தேர்தல் 2019-ஐ முன்னிட்டு தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதை **மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்.இ.ஆ.ப., அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டார்.

தொடர்ந்து, அலுவலர்களுக்கு தேர்தலில் எவ்வாறு செயல்படவேண்டும் என்பது தொடர்பாகவும், வாக்குச்சாவடி மையங்களில் மின்னனு இயந்திரங்கள், VVPAT இயந்திரங்களை எவ்வாறு கையாள்வது, வாக்குச்சாவடிக்கு வாக்களிக்க வரும் வாக்காளர்கள் தெரிவிக்கும் புகார்களை எவ்வாறு எளிதாக கையாள்வது, தொடர்பாக அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார். இதுதவிர வாக்குசாவடி மையங்களில் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி வாக்களித்திட ஏதுவாக சக்கர நாற்காலி வசதி போன்றவைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் சரிபார்த்துக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இப்பயிற்சியில் வாக்குப்பதிவின் போது வாக்காளர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் மற்றும் வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், குறுந்தகடு மற்றும் பவர்பாயிண்ட் மூலம் திரையிட்டு விளக்கப்பட்டு தேர்தல் பணியாற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்த ஆய்வுகளின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எம்.இந்துமதி, சீர்காழி உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.எம்.வேலுமணி, தரங்கம்பாடி வட்டாட்சியர் திரு.சுந்தரம், சீர்காழி வட்டாட்சியர் திருமதி.சபீதாதேவி உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**